முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1286

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.04.2023, வெள்ளிக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றும் தர்மம்
வாரிவழங்கி உலகைகாக்கும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும்
வரமென ஞானஅறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 24 ம் நாள், 07.04.2023, வெள்ளிக்கிழமை)
வையகத்தில் தொடர்ந்து எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனால் உலகமாற்றம்
உண்மைமிக்க சீடர்களைக்கொண்டு இனிதே
குறைவின்றி தரணி எங்கும் நடந்தேறும்
தர்மத்தால் உலகோர்க்கு மாற்றம்
4. மாற்றம் தவமாக கிட்டும்
மக்களை நேசிக்கின்ற மனப்பாங்கும்
ஆற்றல்பட ஆளுகின்றவர்க்கும் மாறி
அகிலமெங்கும் ஞான ஆட்சி மலரக்கூடும்
5. கூடாத கொடுமைகள் எல்லாம்
குவலயத்தை விட்டு தானா ஓடும்
ஈடேற்றம் தர்மத்தை நோக்கிதான்
எங்கும் நிரம்பி உலகோர்க்கு
6. உலகோர்க்கு அதன்வழியே ஞானம்
உண்மை பொருள் அறியும் வண்ணம்
கலகம் துன்பம் ஏதுமின்றி
கண்ணியமோடு நடந்து இந்த மாற்றம் நிகழும்

7. நிகழவே அரங்கன் தொடர்பு
நிலவுலகோர்க்கு அவசியம் அவசியம்
ஜெகமாற்றத்துக்கு ஓங்காரக்குடில் தொடர்பு
செப்பிடுவேன் உலகோர்க்கு அவசியம் அவசியம்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–